IN THE COURT OF II ADDITIONAL SPECIAL JUDGE,
UNDER NDPS ACT, CHENNAI-104.
(Chapter XXIII code of Criminal Procedure)

**C.C. NO.996/2023**

DEPOSITION OF WITNESS FOR P.W.1

NAME : திரு.கோபிநாத்
FATHER/HUSBAND/NAME :
ADDRESS :
OCCUPATION :
AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date: 17.11.2025. (starting time: 12.30P.M)

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

இந்த வழக்கை பொருத்து இ.த.ச.பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வணையப்படததால் மேற் சொன்ன சட்டப்பிரிவுகளை பொருத்து குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் என்டிபிஎஸ் சட்டத்தின் கீழ் மட்டும் இந்த வழக்கின் மேல் விசாரணை தொடர்ந்து நடைபெற உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் வணையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை பொருத்து வாய்மொழி சாட்சியமும் ஆவண சாட்சியமும் ஏற்கனவே இந்த சாட்சியின் மூலம் பதிவு செய்யப்பட்டுவிட்டதால் முதல் விசாரணை அரசு தரப்பில் முடித்துக் கொள்ளப்படுகிறது.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பு**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

N THE COURT OF II ADDITIONAL SPECIAL JUDGE,
UNDER NDPS ACT, CHENNAI-104.
(Chapter XXIII code of Criminal Procedure)
C.C. NO.996/2023
DEPOSITION OF WITNESS FOR P.W 1

NAME : Tr. Gopinath

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date: 03.02.2026. (starting time: 12.15P.M)

**மனுவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்-**

தகவல் எனது கைப்பேசிக்கு வந்தது. தகவலை 12.45 மணிக்கு நான் ஆய்வாளரிடம் எழுத்துபூர்வமாக சமர்ப்பித்தேன். சம்பவ இடத்திற்கு நாங்கள் மூவரும் மொத்தம் இரண்டு இருசக்கர வாகனத்தில் சென்றோம். அதசா1ல் ஆய்வாளர் நான் யாரை அழைத்து செல்லவேண்டும் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை. தகவலாளி சம்பவ இடத்திற்கு நேராக வந்துவிட்டார். சம்பவ இடம் சென்ற போது ஒரு மணி இருக்கும் அப்போதே எதிரி அங்கு இருந்தார். சம்பவ இடத்தில் எதிரி மடக்கி வைத்திருந்த கத்தியை காட்டி என்னை மிரட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரிவு 50 ன் கீழான எதிரிக்கு உண்டான உரிமையை விளக்கி சொல்லவில்லை என்றும் அதசா2 ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதும் எதிரி படிக்காததால் அவருக்கு தெரியாது என்றும் அதசா2 அறிவிப்பானது அதில் உள்ள சங்கதிகளை எதிரிக்கு விளக்கி கூறாமலேயே தயாரிக்கப்பட்டுள்ளது என்றால சரியல்ல. சம்பவ இடத்தில் பொதுமக்கள் நடமாட்டம் உண்டு கடைகள் அதிகளவில் கிடையாது. நான் கூறியது போல சம்பவம் நடைபெற்று இருந்தால் பொது நபர்களை நான் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. தகவல், சோதனை அறிவிப்பு ஆகியவற்றை நான் தான் எழுதினேன். அதசா1 12.30 க்கு ஆரம்பித்து 12.40 க்கு முடிக்கப்பட்டது., அதசா2 1.30 மணிக்கு ஆரம்பித்து 1.35 க்கு முடிக்கப்பட்டது. ஆய்வு நமுனா அதசா3 யை நான் தான் எழுதியுள்ளேன் அதை 1.40 மணிக்கு ஆரம்பித்து 1.45 க்கு முடிக்கப்பட்டது. எதிரியை சம்பவ இடத்தில் கைது செய்தேன். எதிரியை நான் தான் கைது

செய்தேன். அதசா4 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதசா 4ல் சம்பவ இடத்திலேயே குற்ற எண்ணும் சட்டபிரிவு சொல்லப்பட்டுள்ளன. தனியறிக்கை கொடுத்த பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். தனியறிக்கையானது நிலையம் வந்த பின்பு 15.30 க்கு ஆரம்பித்து 15.45க்கு முடிக்கப்பட்டது. நிலையத்தில் இருந்து செல்லும் போது டிஜிட்டல் தராசு, கார்பன் பேப்பர் முதலானவற்றை எடுத்து சென்றோம். படிவம் 91 சம்பவ இடத்திலேயே தயாரிக்கப்பட்டது. 13.00 ஆரம்பித்து 13.30 க்கு முடிக்கப்பட்டது. 22.12.2022 அன்று ஆய்வாளர் நான் நிலையம் வந்த பிறகு 15.15 மணிக்கு என்னை விசாரித்தார். இந்த வழக்கின் அனைத்து ஆவணுங்களும் சான்று பொருட்களும் இந்த வழக்கில் எதிரியை கைது செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தகவல் என்பதே பொய்யான ஆவணம் என்றும் எதிரியை இந்த வழக்கில் சிக்கவைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஆவணங்கள் கற்பனையாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவிலலை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த ஒரு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.